# உத்தரிக்கிற ஆத்துமாக்களின் மன்றாட்டு மாலை 56

ஆண்டவரே இரக்கமாயிரும்(2

கிறிஸ்துவே இரக்கமாயிரும்(2)

ஆண்டவரே இரக்கமாயிரும்(2)

கிறிஸ்துவே எங்கள் மன்றாட்டை கேட்டருளும்

கிறிஸ்துவே எங்கள் மன்றாட்டை நன்றாகக் கேட்டருளும்

விண்ணகத்தில் இருக்கிற பிதாவாகிய சருவேசுரா,

எங்கள் மேல் இரக்கமாயிரும்

உலகத்தை மீட்டு இரட்சித்த சுதனாகிய சருவேசுரா,

எங்கள் மேல் இரக்கமாயிரும்

தூய ஆவியாகிய சருவேசுரா,

எங்கள் மேல் இரக்கமாயிரும்

தூய திருத்துவமாயிருக்கிற ஏக சருவேசுரா,

எங்கள் மேல் இரக்கமாயிரும்

- புனித மரியாயே,

மரித்த விசுவாசிகளுக்காக வேண்டிக்கொள்ளும்

- சர்வேசுரனுடைய புனித மாதாவே,

- கன்னியர்களுள் உத்தம கன்னிகையே,

- புனித மிக்கேலே,

- தூதரும் அதி தூதருமாகிய சம்மனசுகளே,

- நவவிலாச சபையாயிருக்கிற சகல சம்மனசுகளே,

- புனித ஸ்நாபக அருளப்பரே,

- புனித யோசேப்பே

- பிதாப்பிதாக்களும் தீர்க்கதரிசிகளுமாகிய சகல புனிதர்களே,

- திருமுழுக்கு யோவானே,

- புனித பவுலே,

- புனித அருளப்பரே,

- அப்போஸ்தலரும் நற்செய்தியாளருமாகிய சகல புனிதர்களே,

- புனித முடியப்பரே,

- புனித லவுறேஞ்சியாரே,

- வேத சாட்சிகளான சகல புனிதர்களே,

- புனித கிறகோரியாரே,

- புனித அமிர்தநாதரே,

- புனித அகுஸ்தீனாரே,

- புனித இயெரோணிமுவே,

- ஆயர்களும் ஸ்துதியர்களுமாகிய சகல புனிதர்களே,

- தேவ வல்லுனரான சகல புனிதர்களே,

- குருக்களும் ஆசாரியர்களுமான சகல புனிதர்களே,

- சந்நியாசிகளும் தபோதனர்களுமாகிய சகல புனிதர்களே,

- புனித மரியமதலேனம்மாளே,

- புனித கத்தரீனம்மாளே,

- புனித பார்பரம்மாளே,

- கன்னியர்களும் விதவைகளுமாகிய சகல புனிதர்களே,

- ஆண்டவருடைய திரு அடியார்களான சகல புனிதர்களே,

- தயாபரராயிருந்து,

அவர்கள் பாவங்களைப் பொறுத்தருளும் ஆண்டவரே

- தயாபரராயிருந்து,

அவர்கள் மன்றாட்டைக் கேட்டருளும் ஆண்டவரே

- சகல பொல்லாப்புக்களிலும் நின்று,

அவர்களை இரட்சித்துக் கொள்ளும் ஆண்டவரே

- உமது கோபத்திலே நின்று,
- உமது நீதி அகோரத்திலே நின்று,
- பிசாசின் வல்லமையிலே நின்று,
- கொடூர வியாகுலத்திலே நின்று
- கொடிய ஆக்கினையிலே நின்று,
- அக்கினிச் சுவாலையிலே நின்று,
- மரணத்தின் பயங்கரமான இருளிலே நின்று
- துயரமான அழுகையிலே நின்று,
- உத்தரிக்கிற ஸ்தலத்துச் சிறைச்சாலையிலே நின்று,
- இயேசுவினுடைய திருமனித அவதாரத்தைப் பார்த்து,
- இயேசுவினுடைய மாசில்லாத உற்பவத்தையும் பிறப்பையும் பார்த்து,
- இயேசுவினுடைய மதுரமான நாமத்தைப் பார்த்து,
- இயேசுவினுடைய பாலத்துவத்தைப் பார்த்து
- இயேசுவினுடைய ஞானஸ்நானத்தையும் உபவாசத்தையும் பார்த்து,
- இயேசுவினுடைய மிகுந்த தாழ்ச்சியைப் பார்த்து,
- இயேசுவினுடைய சுறுசுறுப்பான கீழ்ப்படிதலைப் பார்த்து,
- இயேசுவினுடைய கிருபையின் மிகுதியையும் அளவில்லாத நேசத்தையும் பார்த்து,
- இயேசுவினுடைய கொடூர உபத்திரவங்களையும் நிர்ப்பந்தங்களையும் பார்த்து,
- இயேசுவினுடைய இரத்த வியர்வையைப் பார்த்து,
- இயேசுவினுடைய கட்டுண்ட கட்டுக்களைப் பார்த்து,
- இயேசு பட்ட அடிகளைப் பார்த்து,
- இயேசுவினுடைய திரு முள்முடியைப் பார்த்து,
- இயேசுவினுடைய திருச் சிலுவையைப் பார்த்து,
- இயேசுவினுடைய கொடூரமான மரணத்தைப் பார்த்து,
- இயேசுவினுடைய ஐந்து திருக்காயங்களைப் பார்த்து,

- இயேசுவினுடைய விலை மதியாத திரு இரத்தத்தைப் பார்த்து,
- இயேசுவினுடைய மகிமையான உத்தானந்தத்தைப் பார்த்து,
- இயேசுவினுடைய அதிசயமான ஆரோகணத்தைப் பார்த்து,
- ஆறுதல் அளிக்கும் தூய ஆவியின் வருகையைப் பார்த்து,
- நடுத் தீர்க்கிற நாளிலே,

- பாவிகளாயிருக்கிற நாங்கள் உம்மை மன்றாடுகிறோம்

எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

- பாவியாயிருந்த மரியமதலேனம்மாளுக்கு பாவ மன்னிப்பு தந்தவரும், நல்ல கள்வனுடைய மன்றாட்டைக் கேட்டவருமாகிய தேவரீரை மன்றாடுகிறோம்,

எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

- மரணத்தின் திறவுகோலையும், நரகத்தின் திறவுகோலையும் கைக்கொண்டிருக்கிற தேவரீரை மன்றாடுகிறோம்,

எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

- இரட்சணியத்துக்கு உரியவர்களை இலவசமாயிரட்சிக்கிற தேவரீரை மன்றாடுகிறோம்,

எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

- எங்கள் சகோதரர் பந்துக்கள் உபகாரிகளுடைய ஆத்துமங்களை உத்தரிக்கிற ஸ்தலத்திலே நின்று இரட்சித்தருள வேண்டுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்,

எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

- பூலோகத்தில் யாரும் நினையாத சகல ஆத்துமாக்களுக்கும் தயவு செய்ய வேண்டுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்,

எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

- கிறிஸ்துநாதரிடத்தில் இளைப்பாறுகின்ற சகலருக்கும் குளிர்ச்சியும் பிரகாசமும் சமாதானமுள்ள தலத்தைக் கட்டளையிட்டருளத் தேவரீரை மன்றாடுகிறோம்,

எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

- பாவதோக்ஷத்தால் அவர்களுக்கு உண்டாகின்ற ஆக்கினையைக் குறைக்க வேண்டுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்,

எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

- அவர்கள் துயரத்தை சந்தோக்ஷமாக மாற்றியருளத் தேவரீரை மன்றாடுகிறோம்,

எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

- அவர்களுடைய ஆசை நிறைவேறத் தயை புரிய வேண்டுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்,

எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

- அவர்கள் உம்மைப் புகழ்ந்து துதிப் பலியை உமக்கு செலுத்தும்படி செய்தருளத் தேவரீரை மன்றாடுகிறோம்,

எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

- உம்முடைய புனிதர்களின் கூட்டத்தில் அவர்களை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்,

எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

- சருவேசுரனுடைய குமாரனே தேவரீரை மன்றாடுகிறோம்,

எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

- கிருபையின் ஊறணியே தேவரீரை மன்றாடுகிறோம்,

எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

உலகின் பாவங்களைப் போக்கும் சர்வேசுரனுடைய செம்மறியே,
**அவர்களுக்கு நித்திய இளைப்பாற்றியைத் தந்தருளும்.**
உலகின் பாவங்களைப் போக்கும் சர்வேசுரனுடைய செம்மறியே,
**அவர்களுக்கு நித்திய இளைப்பாற்றியைத் தந்தருளும்.**
உலகின் பாவங்களைப் போக்கும் சர்வேசுரனுடைய செம்மறியே,
**அவர்களுக்கு நித்திய இளைப்பாற்றியைத் தந்தருளும்.**

ஆண்டவரே இரக்கமாயிரும் (2)

கிறிஸ்துவே இரக்கமாயிரும் (2)

ஆண்டவரே இரக்கமாயிரும் (2)

மு- நரக வாசலில் நின்று,

து- அவர்களுடைய ஆத்துமங்களை மீட்டு இரட்சித்தருளும்.

மு- சமாதானத்தில் இளைப்பாறுவார்களாக

து- அப்படியே ஆகக்கடவது.

மு- ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்,

து- எங்கள் அபயச்சத்தம் தேவரீருடைய சந்நிதி மட்டும் வரக்கடவது.

மன்றாடுவோமாக:

சகல விசுவாசிகளுடைய சிருக்ஷ்டிகரும் இரட்சகருமாகிய சருவேசுரா! மரித்த உமது அடியார்களுக்காச் செய்யப்படுகின்ற பக்தியுள்ள மன்றாட்டுக்களை ஏற்று கொண்டு அவர்கள் மிகுந்த ஆவலோடே விரும்புகின்ற பாவமன்னிப்பைக் அருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம். சதாகாலமும் சீவியருமான சருவேசுரா, இந்த மன்றாட்டைத் தயவோடே கேட்டருளும்.

நித்திய பிதாவே! பெற்றோர், பந்துக்கள், சிநேகிதர், உபகாரிகள் முதலியவர்களைத் தக்க விதமாய் நேசித்து அவர்களுக்கு வேண்டிய நன்மை செய்யக் கற்பித்தருளினீரே, ஆகையால் எங்களைப் பெற்று அன்போடு வளர்த்து ஆதரித்தவர்களும், பற்பல உபகாரம் எங்களுக்குச் செய்தவர்களும் எங்கள் பந்துக்கள், சிநேகிதர் முதலானவர்களும் வேதனை நீங்கி நித்திய காலமும் உம்மைச் சந்தோசமாய்த் தரிசித்துக்கொண்டிருக்கத் தேவரீர் கிருபை செய்தருள வேண்டுமென்று மன்றாடுகிறோம்.

(மரித்த விசுவாசிகளுக்காகவும் வேண்டிக்கொள்வோம்)

மு- நித்திய இளைப்பாற்றியை அவர்களுக்குத் தந்தருளும் சுவாமி

து- முடிவில்லாத பிரகாசம் அவர்கள்மேல் பிரகாசிக்கக்கடவது

மு- சமாதானத்தில் இளைப்பாறுவார்களாக

து- ஆமென்